1348

1348
NAṬARĀJA PIḶḶAI (V.)
Tēcapaktarkaḷ pōṟṟum tiyāka mūrttikaḷāna Cartār
Pakatciṉ, Cukatēv, Rājakuru ivarkaḷ jīviya centamiḻ
kkatampameṉṉum Pakatciṉ kīrttaṉāmrutam:
Iraṇṭām patippu.
Tiruppātirippuliyūr (Madras printed): Śrī Vāṇī Vilāca
Puttakacālaiyār, 1931.
16 p. 18 cm. (P.R.C. Series 35)
Nationalistic songs in praise of Bhagat Singh, Raj
Guru and Sukhdeva.
NAI 3862-53
PP Tam B 4; PIB 38/7

NATIONAL ARCHIVES OF INDIA

PPTam.B4

NATIONAL ARCHIVES OF INDIA

P. R. C. Series 35.

உ
குமரன் துணை.

தேசபக்தர்கள் போற்றும் தியாக மூர்த்திகளான
சர்தார்
பகத்சிங், சுகதேவ், ராஜகுரு இவர்கள்
ஜீவிய
செந்தமிழ்க் கதம்பமென்னும்

பகத்சிங் கீர்த்தனாம்ருதம்

இஃது
முத்தமிழ் க்ஷேத்திரம்
மதுரகவி
வி. நடராஜ பிள்ளை அவர்கள்
இயற்றியது.

(இரண்டாம் பதிப்பு)

வெளியிடுபவர் :
ஸ்ரீ வாணி விலாச புத்தக சாலையார்.
திருப்பாதிரிப்புலியூர்.

காபிரைட் ரிஜிஸ்டர்] 1931 [விலை அணா 2.

பகத்சிங் அவர்களது தூக்குமேடையில் வீரகீர்த்தனை ஆப்டோன் படத்துடன் விலை அணா 2.

உ

குமரன் துணை.

தேசபக்தர் போற்றும் தியாக மூர்த்திகளின்
செந்தமிழ்க் கதம்பமென்னும்

தேசீய கீதம்

சித்தி விநாயக சேவித மந்திரம்

வெண்பா

பாரத தேவிக்குப் பண்புள்ள புத்திரனுந்
தீரன்சர் தார்பகவந் சிங்கமீது—சாரமிகுந்
தேசீய கீதம் திறமையுடன் பாடுதற்கு
மூஷிக வாகனருள் முந்நும்.

பாரததேவி வணக்கம்.

வாவா கார்த்திகா என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

வா வா தேவியே திரு
மலரடி. பணிந்திட நல்மதி புரிந்திட வா

அநுபல்லவி.

தேவ மஹாத்மா தீர சுகாத்மா
ஜெகமெங்கினு மேசித்தே சிறந்திலங்கி:—
திடவாங்: கனிந்தருள வா

சரணம்.

அந்தரர் போற்றும் அருமறை சாற்றும்
செந்தமிழ்க் கூடல்வாழ் நடாராஜன்
தேசிய பக்திச் சித்தந்
தாசிய விந்து நந்திலிற்றிருக்க வா

தேசியப் போர்வீரர் பகத்ஸிங், சுகதேவ், ராஜகுரு
இவர்கள்
தூக்கில்மாண்ட துயரங்கூறுதல்.

இந்துநேச என்ற வர்ணமெட்டு

வேறு சாப்பு.

பல்லவி.

பாஞ்சால தேசவீரன் பகத்ஸிங்கு மறைந்துவிட்டான்
பாலப்பி ராயத்திலே பாரின் வாழ்வைத் துறந்துவிட்டான்
பகரவும் முறையோ—இது
பழவினைக் குறையோ—தேச
பந்தா வளர்ந்து சிறந்து விளங்கியதாம் பா

தொகையறா.

சிக்கியர் குலதிலகச் செல்வனாங் கிருஷ்ணசிம்மன்
செய்தவத் துதித்த சீலன்
ஜெகமெலாங் கொண்டாடுந் தெய்வமாஞ் சாந்தியின்
திட்டமோர்ந் துறையுயர் வையில்
ஊக்கமாய்ப் பன்னிரண் டானவோர்ப்ராயமதில்
உயர்கலா சாலை விட்டு
உரிமையாந் தேசியப் பள்ளியிற் சார்ந்துபே
ருலகத்தொண் டாற்ற வெண்ணி
தீர்க்கமாய்க் கல்யாணஞ் செய்யவே மறுத்திட்ட
தீரனும் டில்லி நகரில்
தெய்வசங் கற்பமாய்ச் சித்தங் கலங்கிட
இடையோடு விரை வாகவே
மூர்க்கமாய் வருவெள்ளத் தாழ்ந்திடுஞ் சீவர்களை
முதல்வனாத் தந்தருடனே
முன்சென்று தேசமாய்க் காத்திட்ட வுத்தமன்
மூதுரையைக் காத்த மேலோன்

பாட்டு.

மோகவுல கோர்வருந்தவே
மாகவுல கோர்திருந்தவே

ஷை தொகையறா.

இருபத்தெட் டாண்டினிலே யெழிலான லாகூரில்
இறங்கிய ஸைமன் கமிஷனை
ஏற்காது தள்ளவே லஜபதியின் தலைமையில்
ஈடிலா ஜனங்கள் கூட
தருணமீ தென்றெண்ணி லஜபதியை யோர்வெள்ளை
சார்ஸண்டு தாக்கியதனால்
தருமனும் லஜபதியும் உயிர்துறந் தாரென்று
சஞ்சலப் பட்டு நெஞ்சம்
உருகியே கண்ணீர்விட் டலறியே யாங்கில
உண்மைநெறி கண்டு ணர்ந்தே
ஓங்கிடும் இந்தியா சட்டசபை தன்னிலே
ஓர்வெடி குண்டெ றிந்த
பெருவீரன் றன்னையே கைதியா கச்செய்து
பிரமனால் விதி முடிந்த
பேதையால் சாண்டர்ஸைக் கொன்றவ னிவனென்னப்
பெரிய கொலைக் காளாக்கவே.

ஷை பாட்டு.

பேசியப்ர சங்கத்தாலே
தேசிய லவை ராக்யத்தாலே பா

ஷை தொகையறா.

போரான கொலைக்குற்றஞ் சாற்றவே சந்தோஷம்
பெரிதாந் தலைக் கொள்ளவே
பேருலக மாதாவுங் கூந்தல்முடிப் பாளென்னும்
பெருமையா லுலகம் போற்றுஞ்
சீரான மஹாத்மாவுங் கொலைக்குற்றம் நீங்கவே
தேர்வனும் இர்வின் சமூகம்
திருமுக மனுப்பியுங் கிருஷ்ணனைப் போல்தூது
சென்று நேரிற் பேசியுங்

காரான நெஞ்சவன் கூடாதென் றேமறுத்து
    கருத்தில் நினைத்த படியே
காலற்கு மஞ்சாத மூவரையும் தூக்கிலிடக்
    கட்டளை பிறப்பிக்கவே
தாராள சிந்தையால் தூக்குமே டையேறி
    சதிபுரி கயிற்றி னுக்குச்
சந்தோஷ மாகவே முத்தங்கொடுத்தனர்
    சாம்ராஜ்யம் பெருக வென்றே

ஷை பாட்டு.

சர்து நட   ராஜன் பாட
மேதினியுள்   ளோர்கொண்டாடப்   பா

பக்த்சிங் வீரர் புகழ்ச்சி

தணிப்பிரசையிற் கூறுதல்

தாயிடத்தி லன்பில்லாத என்ற மெட்டு

பல்லவி.

சர்தார்பகத் சிங்கைப்போலத் தரணிமேலுண்டோ   சர்

அநுபல்லவி.

தரணிமே லுண்டோ வீரன் உலகினில் வேறுண்டோ   சர்

சரணம்.

சர்தார்கிருஷ்ண சிம்மன் பாலன் தன்னலங்கருதா மேலோன்
தாய்நாட்டுக் குயிர் கொடுத்த   சாத்வீக சீலன்   சர்
பாஞ்சால வீரனென்றே   பாக்கியம் பெற்றானின்றே
பாரத தேவிக்குற்ற   பாலனுங் கண்டே   சர்
தேசத் தொண்டிலேயுழைத்தோன் சிரமணமே படைத்தோன்
தியாகபுத்தி யாலுலகைச்   சீர்பெற வைத்தோன்   சர்
சான்மாடக் கூடல்வாசன்   நற்றமிழ்த்தேர் நடராஜன்
நாடுமுயர் கீர்த்திவாய்ந்த   ஞானப்பிர காசன்   சர்

உதாரகுணப் புகழ்ச்சி.

காலக் கொடுமையால் என்ற மெட்டு

கண்ணிகள்.

வீரத்தியாகனுஞ் சூரத்தனமிகு
வித்தக பகத்ஸிங் வீரன்
தீரத்திறனுயிர் சோரப்புரியினுஞ்
சித்தங்கலக்கிடாச் சூரன் வீர

நேசத்திற் பாஞ்சால தேசத்தில் பக்திவி
சேஷத்தில் மிக்கவோர் சீலன்
ரோஷத்தில் நற்சக வாசத்திற் கலைவி
லாசத்தில் தேர்ந்திடும் வோலன் வீ

வீட்டுக்குப் பாரத நாட்டுக்கென்றேயுயி
விட்டுக்கொடுத்த தியாகி
கோட்டுக்கும் வெஞ்சிறைப் பூட்டுக்கு மேற்குண்டு
வேட்டுக்கு மஞ்சிடா யூகி வீர

லோகத்திற் சுதந்தர தாகத்தில் முன்னணி
வேகத்திலுற்ற கெம்பீரன்
யோகத்தி லாண்மையின் பாகத்திற் புரட்சி
யுத்தமீடேற்ற மொய்யாரன் வீர

காரணதேச வைராக்யப் புகழ்ச்சி

கைத்தொழிலும் வர்த்தகமும் என்ற மெட்டு

கண்ணிகள்.

பாரோரெல்லாம் புகழும் பாஞ்சால தேசவீரன்
சீரான கிருஷ்ணசிம்மன் செய்தவத்திலுதித்த
தீரன் பகத்ஸிங் மாண்டசேதி கேட்டிடுவீர்
தென்புடனெல்லோருஞ் சிந்தை நாட்டிடுவீர் பா

கீர்த்தனாம்ருதம்

லாகூரில் தலைமைவைத்த லாலாலஜபதியை
வேகமாய் மார்பினிலோர் வெள்ளையனடித்திடவே
விண்ணுலகம் வாழ்ந்திடவே விணைக்குசென்றார்
வினயமறையோர்ந்து சிங்கும் வெதும்பி நின்றார் பா

ஆங்கில ஆட்சியிலே அநியாயக் கொடுமைதன்னை
திங்கியுயிர் வாழ்ந்திடவே நெஞ்சினிற் கொண்டோங்குமிந்தியா
நீதிமன்றி லோர்வெடிகுண் டெறிந்தனரே
நிட்டூரமான குற்றம் நிறைந்தனவே பா

லாலாலஜபதியின் நவீன காரணத்தால்
மாலான சாண்டர்ஸ்தனை மாய்த்தா ரிவனெனவே
மாறான வழக்குகளும் நடத்தினரே
மாண்சுகதேவ் ராஜகுருவையும் பிடித்தனரே பா

திருமூர்த்தியாய் விளங்குந் தேசபக்தவீரர்களை
பெரியகொலைக் குற்றஞ்சாற்றிப் பேதகமாய்த் தூக்கிலிடப்
பேசினார் தர்மநீதிப் பிரமுகரும்
பெருமையோ கலிகாலக் கொடியவரும் பா

ஆயிரத் தொள்ளாயிரத்து ஆறைக்கொராண்டினிலே
நேயமான மார்ச்சுமாதம் நிகழிருபன் மூன்றினிலே
ஆண்மையுள்ள மூவரையுந் தூக்கினரே
ஆதிசிவன் பாதமதை சேர்த்தனரே பா

பத்துமாதஞ் சுமந்து பரிவுடனே பெற்றெடுத்த
உத்தமியாம் பாரதத்தாய் உருகியே கண்ணீர்வடிக்க
உலகம்புகழ் மஹாத்மா வுளந் திகைத்தார்
உண்டோ பரமன்செய லென்றகைத்தார் பா

சீரோங்கு மாயதுரை க்ஷேத்திரந் தனில்வளரும்
பேரோங்கும் நடராஜன் பேசமிக்கப் பாடல்தனைப்
பேணியே யடிமைவாழ் வகற்றிடுவீர்
பேருலகி லேசுதந்த்ரம் பெற்றிடுவீர் பா

NATIONAL ARCHIVES OF INDIA

பரோபகாரத்தன்மைப் புகழ்ச்சி

என்ன கொடுமை இங்கிலீஷ் என்ற மெட்டு

பல்லவி.

சிங்கஞ் சர்தார்பக வத்ஸிங்கு தீரவானே
பங்கமில்லாத தேசத்தொண்டில் வீரவானே
ஜெயக் கொடியை நாட்டி
சிற்றுயிர் தூக்கில் மாட்டி
ஜெகத்தில் வழி காட்டிச் சிறந்தனனே சிங்

தேசமக்களுமெந்நாளுஞ் செழித்திடவே
பாரதமென் மேலுமேன்மைக் களித்திடவே
தெய்வீகத் தொண்டில் நாடி
உய்வதாற் சுகங் கூடி
மெய்யாகவே கொண் டாடி யுழைத்திடவே சிங்

சுகதேவ் ராஜ குருவி னுயிர்த் தோழனும்
சூது செய் வஞ்சகர்க்கென்று மோர்காலனும்
சோபனக்கல் யாணம்
துறந்ததே பிர மாணம்
தூய்மை யாகுங்கை பாணம் தொடுஞ் சிலனும் சிங்

பாரதத்தாய்க் குற்றவோர்சற் புத்திரனும்
பக்த தேச ஆசிரியருக்கோர் மித்திரனும்
பஞ்சால தேச வாசன்
பல்கலைப்ர காசன்
பாலரும் கட ராஜன் பதம் பாடவே சிங்

மதலைக் கறிவுறுத்து மாட்சி

கிளிக்கண்ணி மெட்டு

கண்ணிகள்

பாரத தேவி புத்ரன் பக்தர்களுக் கேற்ற மித்ரன்
தாரணி போற்றுமடி என் பாப்பா பா

NATIONAL ARCHIVES OF INDIA

சர்தார்பகத் ஸிங்கமடி பா
வெடிகுண்டு குற்றத்தாலே மேலான குற்றஞ்சாட்டப்
படிமிசை மாய்ந்தானடி என் பாப்பா
பரமனருள் பெற்றானடி பா

சகதேவர் ராஜகுரு சொந்தவுயிர்த் தோழனும்
மகவானான் கிருஷ்ண ஸிம்மன் என் பாப்பா
மாசில்லா மைந்தனடி பா

இந்தியா தேசமக்கள் எல்லோரும் அடிமைவிட்டுச்
சொந்தமாய் வாழ்வதற்கு என் பாப்பா
தூக்கிலே மாண்டானடி பா

அங்கம் படைத்துவிட்டால் ஆண்பிள்ளை யல்லவடி
சிங்கப்போல் தீரம்வேண்டும் என் பாப்பா
தீயதொழில் கூடாதடி பா

ஆத்மார்த்த ஞானியடி அப்பன் மஹாத்மா சொன்ன
சாத்மீகப் போராட்டமே என்பாப்பா
சாம்ப்ராஜ்ய மாகுமடி பா

நான்மாடக் கூடலிலே நடராஜன் பாடிடவே
மேன்மேலும் கூடுமடி என் பாப்பா
வீண்பொழுது போக்காதடி பா

கதர் மகத்வம், வற்புறுத்தியல்

செந்தமிழுலகினில் என்ற மெட்டு

கண்ணிகள்

கைராட்டினஞ் சுற்றிக் கதராடை கட்டிக்கொள்வீர்
காந்தி மஹான்சொல் மந்திரம்—சுதந்திர நாகச்
சாத்தியுண்டாகும் தந்திரம் கை

பாட்டிமார் நூற்றாட்டு பணிபோற் கண்டதன்றோ
பாலருடனே கைக்கொள் வீரே—எந்நாளு மிந்திய
ஏங்கிடக் கண்மொழி வீரே கை

ஏழைமக்கள் மானத்தை எழிலுடனே காப்பாற்ற
எல்லோருஞ் சேர்ந்துழைப் பீரோ—ஒற்றுமை கண்டால்
நல்லோருள்ளங்களிப் பாரோ கை

அறுபது-கோடி ரூபாய் அடிவயிற்றில் அடித்து
ஆங்கிலம் போகுதல் நன்றோ—கவனமின்றித்
தூங்கியே மாறுதல் நன்றோ கை

செல்வத்திலே சிறந்த தேசமாகும் இந்தியா
சிந்தை தனிற்கொண் டுய்வீரோ—தேசப்பணியில்
முந்தியே நன்மை செய்வீரோ கை

பாண்டி நகரில்வளர் பாலனும் நடராஜன்
பாடுஞ் சுதேச கீதமே—கேட்டு மகிழ்ந்து
நாடுவீரென்றும் நீதமே கை

தொண்டவர் நன்றிவாழ்த்து

பாலாபிஷேகப் பழனி மலையப்பன் என்ற மெட்டு

பல்லவி.

பாஞ்சால தேசப் பகத்ஸிங் சுகதேவர்
பண்புள்ள வீரர்க்கு பதம் பாடுவோம்
வாஞ்சையுற்றோர்க்கு மஹாத்மாவின் சொற்படி
மாறுமற் செய்யச் சகம் கூடுவோம் பா

தொகையறா.

பாரத மாதாவின் பெரும்பாரம் நீங்கவே
பார்மீதி லவ தரித்தார்
சோரமில்லாமலே தேசஞ் செழித்துய்யத்
தூக்கினி லுயிர் மரித்தார்

சரணத் தொடர்

பரம்பரைக் குணமதைப் பகர்ந்திடலாமோ
வரம்பிதைத் தவறி நாம் மகிழ்ந்திடப் போமோ பா

NATIONAL ARCHIVES OF INDIA

ஷை பல்லவி யெடுப்பு

பாத்திர முற்றனோர் சாத்வீகச் சட்டமே
நேத்திரமான நிலைத்திட்டமே பா

தொகையறா

தேசத்தி லொற்றுமை கூடாத தன்மையால்
தீவினைத் துறந்த வீரர்
மாசற்ற மக்களை யடிமைப் பரங்கெட்டு
வாழ்ந்திடச் செய்த தீரர்

ஷை சரணம்.

சிறந்திடும் வழியதைத் தெரிந்திட வடித்தார்
ஜெகமதிலவர் புகழ் விளங்கிடப் படித்தார்

ஷைபல்லவி யெடுப்பு

சித்ரத் தமிழ் பேரறிஞர் புகழ்ந்திடச்
சுத்தச் சுதந்தர முர சடித்தார் பா

சோக, திரகுணமாண்பு

பூங்கா விநோதமே என்றமெட்டு

பல்லவி.

நீராத்துயரமே ஜெகமதில்பகலச் சிங்கமிறந்தது நீரா

மகுடம்.

தேசமக்க ளேதுடிக்க
நேசமுட னேபடிக்கத் நீரா
சித்திக்கும் புத்திக்கும் தேசிய
பத்திக்கும் வித்தைக்கும் பேரிடர் நீரா
சிங்கம் தங்கம் பிரபல
துங்கம் அங்கம் மடிந்திடத் நீரா

NATIONAL ARCHIVES OF INDIA

திகழப் படுபவ   ரகமுற் படவரு
ஜெகமெப் பொழுதினுந் தகவிற் படவொரு   தீரா
சிந்தைவழி சென்றிடவே சுதந்திரம்
அந்தமுடன் கண்டிடவே யுயிர்விடத்   தீரா
தேவிக்கு மேபணியே   சவிக்க வேகடன்
மேவிக்க வேசுக   மாவிக்க வேபடுந்   தீரா
தேசமக்களு   நேசமுற்றிட
ரோஷம் வைத்துயிர்   நாச முற்றது   தீரா

அநுபல்லவி.

சீரான   வீரத்யாகன்
செத்து மடிந்தது   சித்த முணர்ந்திடத்   தீரா

சரணம்.

பாரோர் புகழ் பாஞ்சாலப்   பட்டிண முற்பவ முற்றவதாரன்
பகரப் பொய்யான தேசப்   பற்றை விலக்கி நடித்தவு தாரன்
தாரணமா நீதிச்   சட்டமுணர்ந்து வழக்கிடு வீரன்
சாத்வீகியா மஹாத்மா   சட்ட மறுப்பிலுழைத்திடு தீரன்
தற்புக ழொழிதிட நற்புக ழால்வரும்   பெரியோன்—செயல்
அற்புத மேவிட இப்புவி மேலொரு   அறியோன்—நய
கற்பனை யூகவிசித்திர மாதிரிற்   குறியோன்—கய
பற்பல காவிய விற்பனனுவரு   நெறியோன்
சத்தகடற்புவி யுறைவாசன்
பத்தா யப்பணி புரிநேசன்
சித்தா முத்தமிழ் நடராஜன்
செப்பிய கற்பக மொப்பி யுரைத்திடத்   தீரா

வங்காளிட்டுத் தேசபக்தியை புகட்டும்
அதி தீரவீரரின் சரித்திரம்
திரேணஞர்
அல்லது
தூக்கு மேடையில் வந்தேமாதர கோஷம்.
விலை அணா ௨.

சுதந்திர வீரப்பெற்றோர் தூய்மை

கருப்புத் தோட்டத்திலே என்ற மெட்டு

கண்ணிகள்.

பாஞ்சால நாட்டினிலே—புற்ற
பகவத்ஸிங் கென்றொரு பாலிய வீரனும்
தூக்கில் மடிந்த கதை—இங்கு
சொல்லவென்றால்மனக் [illegible] னிக்குது
சுகதேவர் ராஜகுரு—தத்தர்
தோழருடன் கூடி துஷ்டத்தனமாக
இந்தியா சட்ட சபை—தன்னில்
ஏற்றவெடிகுண்டு போட்டதாலிவரைக்
கைபிடியாய்ப் பிடித்து—போலீஸ்
கைதியாகச் செய்து கண்ணான லாகூரில்
வெள்ளையர் கூடியல்லோ—கோர்ட்டில்
விமரிசையாக விசாரணை செய்திட
சாண்டர்ஸைக் கொன்றானென்றும்—பின்னும்
தந்திரங் களோடு சதிகள் செய்தாரென்றும்
தூய்மையாய்த் தீர்மானித்தே—கொடிய
தூக்கிலிடுங் குற்றஞ் சொல்லி முடித்தார்கள்
குற்றமும் நீங்கிடவே—இர்வின்
கோமான் சமூகத்திற் கோடிமா[illegible]கள்
சென்று குவிந்தனவே—பார்த்துச்
செங்கோல் வலிமையாற் [illegible]மிரங்காமல்
தூக்கிலிடும்படியே—கட்டளை
துரிதமுடனிட்டார் [illegible]ர்வினும்

NATIONAL ARCHIVES OF INDIA

இந்தவிபரமதைக்—கேட்டு
ஈன்றதாய் தந்தையர் இருதயந்துடித்திட
வந்துசிறைவாசலில்—பெற்ற
மக்களைக் கண்டொரு வார்த்தையுரைத்திடக்
கேட்டனருத்தரவே—அந்தக்
கேடுகெட்டசிறை கெம்பீர நிருபனும்
மறுத்திடப் பெற்றோர்களும்—சிந்தை
மாற்றமில்லாமலே மாநிலத்தாய்க்குயிர்
தந்தவர் வாழ்கவென்றே—ஆசி
சாற்றவுந் தேசியத் தலைவராமூவரைச்
சடுதியிற் கொண்டுவந்தே—தூக்கு
சார்ந்திடு மேடையிற் றங்கிய போதினிற்
சுதந்திர தாகங்கொண்டே—என்றுந்
தூக்கில் மடிந்திடுந் தொண்டரின் வீரத்தைக்
காணுவீரென்றுரைத்து—பாசக்
கயிற்றினுக்கோர்முத்தம் களிப்புடனீந்திடத்
தேவரும் மற்றவரும்—சொந்தத்
தேசியமாதாவுந் தென்புடனேகண்டு
வாழ்த்துமலர் தூவவே—மூவரும்
மாண்டனர் தூக்கினில் மாநிலத்தோருய்யம்
பூண்டனர் வெற்றிமாலை—இதையோர்
போதுமறந்திடப் பொருந்துதில்லைமனம்
தேசத்தொண்டாற்றிடுவோர்—புகழைச்
செப்பிடுமுத்தமிழ் க்ஷேத்திரவாசனும்
நற்றமிழ் வித்வாத்மம்—புகழ்
காடும்கடாரனும் பாடியகீதமாம்
அன்புடன் கேட்டிடுவீர்—நாளும்
அழிவில்லகொண்டாடிட அகிலமேல் வாழ்குவீர்

தனக்கென்று வாழா இந்தியாவின் தனிப்பெருங் கிழவன்
மகாத்மா காந்தி, லார்டு இர்வின்

ஒப்பந்த வாழ்த்து.

ஆலவாய் மதுராபுரி என்ற மெட்டு

பல்லவி.

சாந்தியின் விசேஷப் பந்தமே பெருங்
காமினி தனி லக்ஷ்மியே வருங் சா

அநுபல்லவி.

காமினி தனி லக்ஷ்மியே காம்
கடைப்பிடித்திடச் சொந்தமே—உயிர் சா

தொகையறா.

சாந்தியா மென்னத் தயாளனும் "இர்வினுந்"
தனிப்பெருஞ் சக்தியுடனே
ஏந்திய செங்கோ லென்றென்றும் வாழ்கவே
இனியவொப்பந்தக் கடனே

ஷை பல்லவி.

நித்தியாகவே பூர்த்திசெய்தனர்
க்ஷேமமே வருங் கூடியே
க்ஷேமமே வருங் கூடியே—என்றுஞ்
சிவன் நடராஜன் பாடிய சா

பதிப்பாசிரியர்
திருப்பாப்புலியூர்
திருவாளர் P. இராமலிங்கம் அவர்கள் மீது

வாழ்த்துக் கீதம்

வனசாக்ஷி என்ற வர்ண மெட்டு

பல்லவி.

பதிப்பாளர்—பழமைக் கொரும்பெரு—பதிப்பாளர் உத்

அநுபல்லவி.

பாக்ய முற்றதிரு   வாக்யமுற்றவொரு   பதி

சரணம்.

பார்புகழ்த்திருப்   பாப்புலியூரன்
பாரதி வாணிவி   லாச வொய்யாரன்
சீர்பெறும் பாவலர்க்   கோருபகாரன்
சித்திர புத்தக வர்த்தகம்   நத்திய   பதி
பூமகளாருள்   பொருந்திடும் சேசன்
புனிதமுறுந்தமிழ்   ஞானவிலாசன்
மாமதுராபுரி   வளர்நடராஜன்
மங்களகீத முழங்கிட வோதிய   பதி

முற்றிற்று.

வந்துவிட்டது! வந்துவிட்டது!!

நீங்கள் நெடுநாளாய் எதிர்பார்த்திருந்த
முத்தமிழ் க்ஷேத்திரம் மதுரகவி
வீ. நடராஜபிள்ளை அவர்கள் இயற்றிய
"ஸ்காந்தசேகரன் காந்தர்வமெனும்"

வள்ளித் திருமணம்

இதர தேசிய வர்ணனைகளிலும், சங்கீத கீர்த்தன ஜவளிக் கண்ணி வர்ணனைகளிலும், தற்கால நாகரீக மெட்டுகளிலும் அற்புதமாய் நவரச அலங்காரத்துடன் எழுதப்பட்டது.

விலை அணா 6.

ஷை யார் எழுதிய காந்தி கீர்த்தனாம்ருதம் விலை அணா 2.

கிடைக்குமிடம்:—

ஸ்ரீ வாணி விலாச புத்தகசாலை,
திருப்பாதிரிப்புலியூர்.

NATIONAL ARCHIVES OF INDIA